

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் – சிவகாசி – விருதுநகர் – அருப்புக்கோட்டை – திருச்சுழிநரிக்குடி – பார்த்திபனூர் சாலையில் இரயில்வே கடவிற்கு மாற்றாக ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி இரயில் நிலையங்களுக்கிடையே சாட்சியாபுரத்தில் 61 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 98 இளநிலை வரைதொழில் அலுவலர், 14 உதவியாளர் மற்றும் 8 தணிக்கை உதவியாளர் என மொத்தம் 120 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 85 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவிகளை 525 கலைஞர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 6 திருக்கோயில்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 6 திருக்கோயில்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.


ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வு S.I.R. ஐ எதிர்த்து திருவள்ளூர் ரயில் நிலையம் எதிரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், வி.ஜி.ராஜேந்திரன், எம்.எல்.ஏ., ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., சசிகாந்த் செந்தில் எம்.பி., துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ., மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சி தலைவர்கள், தி.மு.க. மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் பலரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.


SIR தீவிர சிறப்பு திருத்தத்தை கண்டித்து காஞ்சிபுரத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் 15.000.க்கும் மேற்பட்டோர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் த.வேல்முருகன் எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஜி. ராமகிருஷ்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், துணை மேயர் குமரகுருநாதன், உள்ளிட்ட மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகள், மாவட்ட தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.